கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුවස උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE

NP/15/MA/GEN-08

My No:- Your No:-

14.02.2008

சுற்றறிக்கை இல: 02/2008

சகல ப.நோ.கூ.சங்க தலைவர்களுக்கும்,

## 'CO-OP CITY' நவீன விற்பனை நிலையம் அமைத்தல்

'CO-OP CITY' நவீன விற்பனை நிலையம் அமைப்பதற்காக அரசாங்கத்தின் 2008ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய ரூபா. ஒரு மில்லியன் ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கும் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நவீன விற்பனை நிலையத்திற்கான உபகரண கொள்வனவின்போது கூ.அ.ஆணையாளர் / கூ.அ.உ.ஆணையாளர் சிபாரிசுடன் அவ்விபரங்களை சங்கத்தால் கணக்கு பேணப்படும் மக்கள் வங்கிக்கு சமர்ப்பித்தபின் உரிய நிதி மக்கள் வங்கியினூடாக வழங்கப்படும். கூ.அ.உ.ஆணையாளரும் மக்கள் வங்கி அலுவலரும் உரிய கட்டடத்தினை பரிசீலித்து இணக்கப்பாட்டினை ஏற்படுத்திய பின்னரே பணம் வழங்கப்படும்.

இந்நிதி 2008ம் ஆண்டின் மூலதனச் செலவின் கீழ் வழங்கப்படுவதால் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

1. இந்நிதி உரிய ப.நோ.கூ.சங்கத்தின் நவீன விற்பனை நிலையத்திற்கான உபகரணக் கொள்வனவிற்கு மட்டும் பயன்படுத்துதல் வேண்டும். வேறு எத்தகைய தேவைகளுக்கும் பயன்படுத்தலாகாது.

2. இவ்வுபகரணக் கொள்வனவு அரச விதிமுறைகளுக்கமைய நடைபெறுதல் வேண்டும். அதாவது கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு, அவை கேள்விச்சபையில் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3. உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின் உரிய விபரங்கள் ப.நோ.கூ.சங்கத்தின் உபகரண பதிவேட்டில் முறையாக பதிவு பெறல் வேண்டும்.

4. இத்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் தொடர்பில் இணைப்பு 01ல் குறிப்பிடப்படும் வகையில் முன்னேற்ற அறிக்கையினை இருவாரங்களுக்கு ஒரு தடவை உதவி ஆணையாளரின் சிபாரிசுடன் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். என்னால் கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அறிக்கை எனது அவதானத்துடன் அனுப்பிவைக்கப்படும். இவ்வறிக்கை சமர்ப்பிப்பதில் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படல் வேண்டும். தாமதமும் தவிர்ககப்படல் வேண்டும்.

CCD & RCS : 0602264646 Gen Office: 0602264645 Fax: 0602266506

இந்நவீன விற்பனை நிலையங்களுக்குத் தேவைப்படும் சகல உபகரணங்களுக்குமாக வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதால் அவர்களிடம் மொத்தமாக கொள்வனவு செய்கையில் கிடைக்கப்பெறும் இலாபம் ப.நோ.கூ.சங்கங்களுக்கு கிடைக்கும் வகையில் கொள்வனவு செய்வதற்கு உரிய தகவல்களை கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் வழங்கும்.

இவ்வுபகரணக் கொள்வனவுகள் தொடர்பான செலவு உறுதிச்சிட்டை, செலவுப்பற்றுச்சீட்டு, மற்றும் கேள்விச்சபை தீர்மானம், கூறுவிலைகள் என்பவற்றின் மூலப்பிரதிகள் எனக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இவை எனது அவதானிப்புடன் கொழும்பு கூ.அ.ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

சகல நவீன விற்பனை நிலையங்களுக்குமான பிரதான பெயர் பலகை வரைவுள்ள யூனிலிவர் நிறுவனத்தினால் இலவசமாகப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அந்நிறுவனத்தின் திரு.மொகான் இரத்தினகுமார **(தொலைபேசி இல :0773187458)** அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

நவீன விற்பனை நிலையத்திற்கான நிறமூட்டல் தொடர்பாக கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் 2008.01.24ந் திகதிய 4/1/CC/GEN இலக்க கடிதத்தில் நிறவிபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நிறமூட்டல் செய்யப்படுதல் வேண்டும்.

எனது சிபாரின் பேரில் வழங்கப்படும் .இந்நிதியுதவி தொடர்பில் மேற்படி தகவல்கள் அமைச்சிற்கு அறிவிக்க வேண்டியுள்ளதால் உரிய அறிக்கையினை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கும்படியும் அதனூடாக இத்திட்டத்தினை சிறப்பாக முடிவுறுத்துவதற்கு உதவும்படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசினால் வழங்கப்படும் இந்நிதியுதவியின் கீழ் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு வசதியாக ஏப்ரல் புத்தாண்டு தினத்திற்கு முன்பு சங்கங்கள் CO-OP CITY திறப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.

நவீன விற்பனை நிலையம் ஆரம்பித்து செயற்படத் தொடங்கிய பின்பு இணைப்பு 02ல் குறிப்பிடப்படும் வகையில் முன்னேற்ற அறிக்கையினை மாதாந்தம் அடுத்துவரும் 05ந் திகதிக்கு முன்பு உதவி ஆணையாளரின் சிபாரிசுடன் எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் மேற்குறிப்பிட்ட Co-op CITY இயங்க ஆரம்பித்ததும், ஒவ்வொரு சங்கத்தினதும் இவ்விற்பனை நிலையத்தின் வர்ணப் புகைப்படமொன்றினை தங்கள் அவதானிப்புடன் ஆவணப்படுத்தும் நோக்கத்திற்காக எனக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

தங்களின் தகவலுக்காக கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது.

**ஆ.சுப்பிரமணியசர்மா,**
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வ.மா)

பிரதி : கூ.அ.உ.ஆணையாளர்கள், - CO-OP CITY தொடர்பான செயற்பாடுகள் அரசநிதிப் பிரமாணங்களுக்கு அமைய செயற்படுவதை கண்காணிப்பதற்கும், முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்று உரிய காலத்திற்குள் அனுப்பிவைப்பதற்குமாக.